


# ஆகஸ்ட் 14

## புனித யுசேபியுஸ்

இவர் உரோமையில் பிறந்தார். வேத கலகம் தொடங்கியதும் இவரைப் பிடித்து, கிறிஸ்துவைப் பற்றி போதித்தார் என குற்றம் சாட்டினர். அஞ்ஞான தெய்வங்களுக்கு பலியிட இவர் மறுத்தார். இவரை கொடூரமாக உபாதிக்க நடுவன் கட்டளையிட்டான். "ஆண்டவராகிய இயேசுவே, என்னைக் காப்பாற்றும் வாழ்ந்தாலும் இறந்தாலும் நாங்கள் உம்முடையவர்களே" என்று இவர் சொல்லிக் கொண்டிருந்தார். இவரை எரிக்கும்படி நடுவன் உத்தரவிட்டான். இவரோ நெருப்பை நோக்கி மகிழ்ச்சியுடன் நடந்து சென்றார். இவரது முகத்தில் தோன்றிய ஆனந்தத்தைக் கண்ட அதிகாரி வியப்புற்றான். தேவதைகளுக்குப் பலியிடும்படி அதிகாரி கெஞ்சிக் கேட்டான். தம் முன் வரும்படி பேரரசன் இவரை அழைத்தான். இவரது முகத்தின் அழகையும் காணப்பட்ட மகிழ்ச்சியையும் எல்லோரும் கண்டு திகைத்தார்கள். இவரிடம் குற்றம் ஒன்றும் இல்லை என்று கண்ட அரசன் இவரை அதிகாரி தன் பிரியம் போல் நடத்த விட்டு விட்டான். அதிகாரியோ தேவதைகளுக்குப் பலியிடவும் பயமுறுத்திப் பார்த்தான். இவர் அசையவில்லை. தலையை வெட்டிக் கொல்லும்படி அவன் உத்தரவிட்டான். இந்த தீர்ப்பைக் கேட்டதும் இவர் கடவுளுக்கு நன்றி செலுத்தினார். உடனே வானத்திலிருந்து ஒரு குரல் "வேதனை வழியாகவே மோட்சத்தில் இடம் பெறுவாய்" என்று கூறியது.

சிந்தனை: நாம் வாழ்ந்தாலும் இறந்தாலும் இயேசுவுக்கு சொந்தமானவர்கள் எனவே அவரது உதவியை உரிமையோடு கேட்டுப் பெறலாம்.

செபம்: ஆண்டவரே, நான் உமக்குச் சொந்தம் என்பதை மறந்து விடாதேயும்.